பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
29 12 2024 **SUNDAY** 12 40 **PM**
வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. அரசியலமைப்புச் சட்டம் எல்லா காலகட்டங்களிலும் நாட்டை வழிநடத்தும் ஒளிவிளக்காக திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் உள்ள ராணுவப் பயிற்சி நிலையங்களை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று பார்வையிடுகிறார்.

3. உத்தரபிரதேசத்தில் நடைபெறும் மகா கும்பமேளாவில் பங்கேற்க வருமாறு அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், முக்கிய தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

4. தென்கொரியாவில் நேரிட்ட விமான விபத்தில் 96 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

5. ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் சூர்மா அணியை – தமிழக அணி எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

அரசியலமைப்புச் சட்டம் எல்லா காலகட்டங்களிலும் நாட்டை வழிநடத்தும் ஒளிவிளக்காக திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (1) 33 செகண்ட்ஸ்)

மக்களை அரசியல் சட்ட மரபோடு இணைக்கும் வகையில் **constituiton75.com** என்ற பெயரில் இணையதளம் உருவாக்கப்பட்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (2) 38 செகண்ட்ஸ்)

உத்தரபிரதேச மாநிலம், பிரயாக்ராஜில் அடுத்த மாதம் 13ஆம் தேதி தொடங்கும் மகா கும்பமேளா, நாட்டின் பன்முகத் தன்மைக்கான சான்றாக விளங்கும் என்று திரு. நரேந்திர மோடி கூறினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (3) 40 செகண்ட்ஸ்)

நாட்டில் ஒற்றுமை மலரட்டும் என்ற செய்தியை மகா கும்பமேளா வழங்கும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த கும்பமேளாவில் செயற்கை நுண்ணறிவு **Chatbot** தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளதாகவும், இதன் மூலமாக, பதினொரு மொழிகளில் தகவல்களை பெற முடியும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள உலக **Waves** உச்சிமாநாடு, நமது நாட்டின் முன்னேற்றத்தில் முக்கிய முன்னெடுப்பாக அமையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (4) 26 செகண்ட்ஸ்)

இந்த உச்சிமாநாட்டில் இளையோரும், படைப்பாற்றல் துறையை சேர்ந்தவர்களும் அதிக அளவில் பங்குபெற வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

பராகுவே நாட்டைச் சேர்ந்த திருமதி **Erika Huber,** ஆயுர்வேத மருத்துவ ஆலோசனைகளை வழங்கி வரும் தகவல் தமக்கு வியப்பளித்துள்ளதாக பிரதமர் கூறினார்.

பொறியியல் பயின்ற அவர் ஆயுர்வேத மருத்துவ கல்வியில் நாட்டம் கொண்டு, பின்னர் அதில் வல்லுநராக உயர்ந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் **Fiji** நாட்டில் மத்திய அரசின் உதவியோடு தமிழ் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சி தொடங்கப்பட்டதாக பிரதமர் கூறினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (5) 27 செகண்ட்ஸ்)

நமது நாட்டு மக்கள் உடற்பயிற்சியில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், அனைத்து வயதினரிடமும் உடற்பயிற்சியை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக பிரதமர் கூறினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (6) 40 செகண்ட்ஸ்)

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்று இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>><<<<<

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் உள்ள மூன்று ராணுவப் பயிற்சி நிலையங்களை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று பார்வையிடுகிறார்.

இந்தப் பயணத்தின் போது, ராணுவத்தினரோடு கலந்துரையாடவுள்ளதை தாம் ஆவலோடு எதிர்நோக்கி இருப்பதாக அவர் தமது சமூகவலைதள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட அண்ணா பல்லைக்கழக மாணவிக்கு நீதி கிடைக்கும் வகையில் பிஜேபி தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சென்னை கோயம்பேட்டில் செய்தியார்களிடம் பேசிய அவர், இந்த விவகாரத்தில் முதல் தகவல் அறிக்கை சமூகவலைதளங்களில் வெளியானது தமிழக அரசின் கவனக்குறைவை வெளிக்காட்டுவதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் நடைபெறும் மகா கும்பமேளாவில் பங்கேற்க வருமாறு அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், முக்கிய தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதையொட்டி புதுதில்லியில், முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த், பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்டோரை யோகி ஆதித்யநாத் நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தார்.

>>>>><<<<<

தென்கொரியாவில் நேரிட்ட விமான விபத்தில் 96 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

அங்குள்ள **Muan** விமான நிலையத்தில் தரையிறங்கிய போது, இந்த பயணியர் விமானம் விபத்துக்குள்ளானதாகவும், இதில் ஆறு பணியாளர்கள் உட்பட 181 பேர் பயணித்ததாகவும் அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

மீட்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், காவல்துறை, ராணுவம் மற்றும் கடற்படையைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட வீரர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இந்நிலையில், தென்கொரியாவின் தற்காலிக அதிபர் மற்றும் பிரதமராக செயல்பட்டு வரும் திரு. **Choi Sang-Mok** விபத்து நேரிட்ட இடத்திற்கு சென்று பார்வையிட்டார்.

தற்போதைய நிலைமையை அதிகாரிகளிடம் கேட்டறிந்த அவர், மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு வலியுறுத்தினார்.

இந்த விபத்தில் சிக்கியவர்களில் இதுவரை ஒரு பணியாளரும், ஒரு பயணியும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

**>>>>><<<<<**

அனைத்து புதிய ஸ்மார்ட் ஃபோன்கள், டேப்லெட்கள், கேமராக்களுக்கு ஒரேவிதமான சார்ஜரை பயன்படுத்த வேண்டும் என்ற விதி நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளதாகவும், அனைத்து நிறுவனங்களும் இதனை பின்பற்ற வேண்டும் என்றும் ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மேலே குறிப்பிட்ட அனைத்து மின்னணு சாதனங்களும் **USB-C** வகை சார்ஜரை கொண்டிருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் சூர்மா அணியை – தமிழக அணி எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 8.15க்கு தொடங்குகிறது.

மற்றொரு ஆட்டத்தில் ஹைதராபாத் - பெங்கால் அணிகள் மோதுகின்றன.

>>>>><<<<<

18வது **CEC** ஐஸ் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி லடாக்கில் உள்ள லே நகரில் நேற்று தொடங்கியது.

இதில் ஆறு மகளிர் அணிகள் உட்பட 16 அணிகள் பங்கேற்கின்றன.

>>>>>END<<<<<